# கிரான்
# கிறிஸ்து சேவ ஆச்சிரம
# பத்து வருடங்கள்



ஆச்சிரம பொதுத் தோற்றம்

இறைவனிடம் பெரும் செயல்களை எதிர்பார்
இறைவனுக்காகப் பெரும் செயல்களை எத்தனி.

**1958 — 1968**

# புகுமுகம்

பத்து வருடங்கள் பத்து நிமிடங்கள்போலச் சென்று விட்டன. எனினும் பத்தாண்டுகளாக இறைவனுடைய அருட் பெரும் செயல்களை பத்தாயிரம் கோடி நாக் கொண்டு பகரினும் எழிதன்று.

"என் ஆத்துமாவே. கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே", எனச் சங் கீதகாரரோடு சேர்ந்து துதிப்போம்.

அன்று தன்னிடமிருந்த பணம் எல்லாவற்றையும் சேர்த்து நூற்று இருபது ரூபா தந்தார் பெரியண்ணன். மாலை ஆறு மணியிருக்கும் ஆச்சிரம தொண்டர்கள் மரு தனைமடம் புகையிரத நிலையத்துக்கு வந்தோம். செல்வி. புக்வால்ரர் அம்மையும் மேரி அக்கா திருமதி றிச்சேட் அவர்களும் சில அநாதைப்பிள்ளைகளும் அங்கே நின்றார் கள். புகையிரதம் வந்ததும் நாங்கள் இருவர் மட்டக் களப்பு 3-ம் வகுப்புப் பெட்டியில் ஏறிக்கொண்டோம். காப்பார் உன்னைக் காப்பார் காத்தவர் காப்பார் இன் னும் இனிமேல் கலங்காதே மனமே கண்டுனை அழைத் தவர் கரமதைப் பார் அவர் கைவிடாதிருப்பார்.

ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை எண்ணிப்பார். என்ற கீதத்தை மேடையில் நின்ற பிள்ளை கள் அருள் வழியப் பாடினார்கள்.

எங்கள் கண்கலங்க வண்டியும் புறப்பட்டது. கர்த் தர் பெரியவர். கர்த்தர் நல்லவர். அவர் என்ன செய் தார் என்பதை வாசித்துப்பாருங்கள்.

மிகவும் சுருக்கமாகவே தொகுத்திருக்கின்றோம். இரண்டாம்பாகமாக விடய தானம் செய்தவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய அன்புப்பெரியார்களுக்கும் எங்கள் அகம் கனிந்த நன்றி.

**சின்னண்ணன்**

பெரியண்ணன்

சேவக் மறைத்திரு சு. செல்வரத்தினம்



எனது விசுவாசத்தினாலுமல்ல இறைவனுடைய உண்மையாலேயே வாழுகிறேன்.

# கிரான் ஆச்சிரம பத்தாம் வருட விழாவிற்கு

## ஒரு செய்தி



இலங்கை மெதொடிஸ்த மகாசங்க அக்கிராசனரும் அகில உலக திருச்சபைகளின் தலைவர்களுள் ஒருவருமான கலாநிதி மறைத்திரு D. T. நைல்ஸ் வாழ்த்துகிறுர்.


ஒரு ஸ்தாபனத்தின் சீவியத்தில் பத்து வருடம் மிகவும் குறுகிய காலம் எனலாம். ஆயினும் முதல் பத்து வருடங்களே மிகவும் விசேஷமான காலம். இக்காலத்திலேயே தோன்றிய நோக்கங்கள் முதிர்ந்தும், அஸ்திபாரங்கள் நிலை நாட்டப் படுகின்றன.

இப் பத்து வருடங்களில் கடவுள் நிறைவேற்றிய யாவற்றிற்கும் நன்றியறிதலோடும், அடுத்துவரும் பத்து வருடங்களில் உண்மையான புதிய முயற்சிகளினுல் சிறந்த ஆசீர்வாதங்கள் உண்டாகவேண்டும் என்னும் செபத்தோடும் இந்த வாழ்த்துதல் ஆச்சிரமத்திற்கு அனுப்பப்படுகிறது.

ஒரு ஆச்சிரமம் கிறிஸ்தவ சமுதாயத்துக்குள் ஒரு கிறிஸ்தவ சமுதாயம் உலக வாழ்க்கையில் எவ்விதம் விளங்க வேண்டும் என்பதற்கு ஒரு அடையாளமாய் அமைக்கப்பட்டுள்ளது.

**D. T. NILES**

# GREETINGS



The Opportunity of faith and response to God is something to be grasped while it is presented. The glory of God and witness to His love have surely been the result however little human reckoning may show in the adventure of the past ten years in the Kiran Ashram. The Eternal leads His army on, and we pray to follow Him to His victory. In this process the Lord still calls more of His children to enlist in the march forward of His kingdom, and he that does not obey 'scatters'.

J. A. R. NAVARATNAM
Archdeacon of Jaffna.

கிரான்

# கிறிஸ்த சேவ ஆச்சிரம பத்து வருடங்கள்

**இறைவனிடம் பெரும் செயல்களை எதிர்பார்**
**இறைவனுக்காகப் பெருஞ் செயல்களை எத்தனி.**


என்பதே எங்கள் ஆச்சிரமத்தின் மகுட வாக்கியமாகும். சென்ற காலத்தில் இறைவனுடைய அருட் பெரும் செயல்களை நினைப்பவர் எதிர்காலத்தில் இறைவனுக்காகப் பெரும் செயல்களைச் செய்யத் துணிவு கொள்வர். பூர்வகாலத்தில் இந்தியாவில் ஆச்சிரமங்களும், குருகுலங்களும் இருந்தன. அவை பிரமச்சாரிய ஆச்சிரமங்கள், கிரகஸ்தர் ஆச்சிரமங்கள் என அமைந்து குருவும் சீஷர்களுமாக இருந்து ஆத்மயோகம் செய்து இறை இயல் துறையில் பாடம் கற்று பணி செய்து பயிர் செய்து உடலிலும் உள்ளத்திலும் வலிமையும் தூய்மையும் பெற்று வாழ்ந்தனர். பூமண்டலத்தின் மையமெனக் கருதக்கூடிய பலஸ்தீன நாட்டில் உலக இரட்சகராகிய கிறிஸ்து பெருமானும் அவரது அன்புச்சீஷர் பன்னிருவரும் நாடெங்கும் சுற்றி நல்லுபதேசமும் நன்மையும் செய்து குருநாதர் மரித்து உயிர்த்து பரலோகத்துக்கெழுந்தருளிப் போகும் போது தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த அன்புக் கட்டளைக்கமைந்து முதல்நூற்றுண்டிலேயே அவரது சீஷருள் ஒருவரான புனித தோமா இந்தியாவுக்கு கிறிஸ்து நாதரின் இன்பச் சுவிசேடத்தைக் கொண்டுவந்து விட்டார் என்பதை வரலாறு கூறும். சென்னைப்பட்டணத்துக்கணித்தாயுள்ள சென் தோமாஸ் மலையும் அங்கு அமைந்திருக்கும் தேவாலயமும் அவற்றை உறுதிப்படுத்தும். 20 நூற்றுண்டுகளாக இந்தியாவில் கிறிஸ்த சமயம் மேல்நாட்டாராலும் சுதேசிகளாலும் பிரசங்கிக்கப்பட்டும்

அனுசரிக்கப்பட்டும் வந்தாலும் கிறிஸ்தவ ஆச்சிரமங்கள் தோன்றியது இந்நூற்ருண்டிலேயே. 1921-ம் ஆண்டு தென் இந்தியாவில் வடஆற்காட்டு ஜில்லாவில் உள்ள திருப்பத்தூர் என்ற இடத்தில் கிறிஸ்துகுல ஆச்சிரமங்கள் தோன்ற வித்திட்ட பெருமையும் புகழும் எங்கள் அன்புக்குரிய பக்தர்களும் தியாகிகளுமான டாக்டர் சவரிராயன் யேசுதாசனுக்கும், டாக்டர் பாரஸ்தர் பேற்றன் என்பவர்களுக்குமுரியதே அன்றுமுதல் இன்றுவரை இந்தியாவிலும் இலங்கையிலும் சுமார் 30 ஆச்சிரமங்கள் தோன்றி கடவுளுடைய இராச்சிய மகிமைக்காக யேசுவின் நாமத்தில் நல்லூழியம் புரிந்து வருகின்றன. மேலே குறிப்பிட்ட பக்தர்களின் நட்பின் பேருகவே எங்கள் அன்புப் பெரியண்ணன் அருள் திருவாளர் சு. செல்வரத்தினம் 1939-ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள இணுவில் என்னும் கிராமத்தில் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தை ஆரம்பித்தார். அதன் நோக்கங்களும் அதன் வளர்ச்சியையும் பற்றிய விரிவான வெளியீடொன்று 1964-ம் ஆண்டு எங்கள் ஆச்சிரம வெள்ளிவிழாவை முன்னிட்டு வெளியிட்டிருந்தோம். அது தேவையானவர்கள் எங்களிடம் இரண்டு ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆச்சிரமத்தின் நோக்கங்களுள் கீழ்மாகாணத்திலுள்ள காடுகளில் வசிக்கும் மக்கள் மத்தியில் சுவிசேஷப்பணி செய்யவேண்டுமென்பதும் ஒன்ருகும். இப்பணியில் வைத்திய சேவை செய்ய வேண்டுமென்ற வாஞ்சையுடனும் தீர்மானத்துடனும் வைத்திய கல்லூரியில் கற்றுவந்த வாலிபன் எதிர்பாராத வண்ணம் தன் படிப்பை முடிக்கு முன்பே இறைவனடி சேர்ந்தார். இந்த ஊழியத்தைப் பற்றி மட்டக்களப்பு மெதெடிஸ்த சபையோடும், இலங்கைத்திருச் சபையோடும் பலமுறை கலந்து ஆலோசிக்கப்பட்ட பின்பு 1953-ம் ஆண்டு சித்திரை மாதம் கழுவன்கேணியிலிருந்து ஆரம்பித்தோம். பல வருடங்கள் ஆச்சிரமத் தொண்டனுகவும் அப்பொழுது கழுவன்கேணி மெதொடிஸ்த சபை ஊழியனுகவும் இருந்து அண்மையில்

சின்னண்ணன்

சேவக் மறைத்திரு ஐ. த. யேசுசகாயம்



நாங்கள் பைத்தியம் கொண்டவர்களானால்
கிறிஸ்துவுக்காகவே

சாம் அண்ணன்

சேவக் மறைத்திரு சாம் T. அல்பிரெட்




நான் விசுவாசித்திருப்பவர் இன்னார் என்று அறிவேன்.

காலஞ்சென்ற திருவாளர் எஸ். எஸ். கார்த்திகேசுவும் இந்த ஊழியத்துக்கு உதவிசெய்யும்படி மெதொடிஸ்த சினட் சங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தார். கழுவன் கேணியிலிருந்து சுமார் இருபது மைல்களுக்கப்பாலுள்ள கானந்தனை, முறத்தானை, காயாங்கேணி, மாங்கேணி கிராமங்களைச் சந்தித்து ஊழியம் செய்து வந்தோம். நிர்வாக சபையின் அனுமதியோடு அவ்வருடம் புரட்டாதி மாதம் யேசுசகாயமும் எஸ். அரியரத்தினமும் இவ்வூழியத்திற்காகப் பிரத்தியேகப் படுத்தப்பட்டு மேலே கூறிய கிராமங்களுக் கணித்தாயுள்ள வட்டிபோட்டமடு என்னுமிடத்தில் அரசாங்கத்திடம் பெற்ற எட்டு ஏக்கர் பூமியில் ஆரம்பித்தோம். இந்தப் பூமியை பெற்றுக் கொள்வதிலும் ஊழியத்தை ஆரம்பிப்பதிலும் உதவிமாகாண அதிபர் திருவாளர் தேவராஜன், காலஞ்சென்ற திருவாளர் C. T. R. சிங்கம், டாக்டர் குணம் தூதர், 'திருவாளர் K. E. சவுந்தரராசா என்பவர்கள் பேருதவி செய்தனர். இரண்டு மாதங்களாக ஒரு சிறு கொட்டிலில் வசித்தோம். பற்றைக்காடு சூழ்ந்திருந்தது. விஷப்பாம்புகளும் இன்னும் பல விஷஜெந்துக்களின் குடியிருப்பாக இருந்தாலும் நம் அருமை இரட்சகருடைய பெரிதான அடைக்கலத்துக்குள் ஆச்சரியமாகக் காக்கப்பட்டோம். பின்பு ஒரு கிணறும் ஜோதிவாசம் என்னும் குடிசையும் கட்டப்பெற்று அவ்வாண்டு ஐப்பசி மாதம் 31-ம் திகதி மெதொடிஸ்த சபை அக்கிராசனர் அருள் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் அவர்களால் ஜோதி நிலையம் என்னும் பேயர் புனைந்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. சகோதரி எலிசபெத் பேக்கர் அம்மையார் தீபம் ஏற்றி ஜோதி வாசம் என்னும் குடிசையைத் திறந்து வைத்தார். மட்டக்களப்பு யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்தும் அயல் கிராமங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் சமுகமளித்தனர். சில மாதங்களுக்குள் அரசாங்கத்தார் அளித்த சிறு நன்கொடையைக் கொண்டு "சகாயர் வாசம்" என்னும் வீடு கட்டப்பெற்றது. சகோதரன் ஹரல்ட் குட் சைல், சகோதரன் கதிரேசு செபரத்தினம், சகோதரன் **Basil**


Rebera என்பவர்களும் வேறும் பல சகோதரரும் காலத்துக்குக் காலம் இந்த ஊழியத்தில் மிகவும் உதவியாக இருந்தனர். காட்டில் வசிப்பவர்கள் இரண்டு மூன்று குடும்பங்களாகப் பற்பல இடங்களில் பரந்து இருந்தமையால் அவர்கள் வசிக்கும் இடங்களுக்குப்போய் சேர்வது சற்றுச் சிரமமான காரியமே எனினும் அக்கிராமங்களுக்குச் சென்று படக்காட்சிகள் பாட்டுகள் பிரசங்கங்கள் மூலம் சுவிசேஷப் பணிசெய்தோம். வைத்திய உதவியற்ற இடங்களாக இருந்தமையால் வியாதியஸ்தருக்கு வைத்திய சிகிச்சையும், காயப்பட்டோர்களுக்கு முதலுதவியும் செய்து வந்தோம். ஏழைமக்களிடம் உள்ள நிறைந்த விசுவாசமும் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நிறைவான கிருபையும் பலருக்கு ஆச்சரியமான ஆரோக்கியத்தை அளிப்பதைக் கண்டோம். எங்கள் வயல்களை நாங்களே பண்படுத்தியும் எங்களால் செய்யமுடியாத சில வேலைகளைக் கூலி ஆட்களைக் கொண்டும் செய்விக்கின்றோம். இவ்வேலையில் சகோதரன் மகாவில்பிள்ளை சாமுவேல் எங்களுக்கு அதிக உதவியாக இருந்தார். சில வருடங்களில் வயல்களால் நஷ்டமேற்பட்டபோதும் பொதுவாக வயல் வருமானம் எங்கள் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்த பெரிதும் உதவியாக இருக்கிறது. இலங்கை திருச்சபைக் குருவும் எங்கள் ஆச்சிரம நண்பனுமாக இருந்து காலஞ்சென்ற அருள் திரு உவில்பிறெட் சினெல் அவர்களின் அன்பு நினைவாக நிறுவப்பெற்ற ஓர் சிறிய அழகிய ஜெபவீடு 1955-ம் ஆண்டு ஆனி மாதம் கொழும்பு அத்தியட்சர் மகாகனம் கிரஹாம் பெல் அவர்களால் அஸ்திபாரக் கல் நாட்டப்பெற்று ஆவணிமாதம் 28-ந் திகதி தென்னிந்தியசபை யாழ்ப்பாண அத்தியட்சகர் மகாகனம் சபாபதி குலேந்திரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சுற்றுக்கிராமங்களிலிருந்தும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். கிறிஸ்துகுல ஆச்சிரம ''சின்னண்ணன்'', டாக்டர் ஈ. பேற்றன் அவர்கள் விசேட

ஜோதிநிலைய செபாலயம்



மறைத்திரு உவில்பிரெட்சிநெல் அவர்களின் இன்ப நினைவு.

செபாலய பீடம்



பேச்சாளராகவும், டாக்டர் மேசன் ஓல்கோர்ட் என்பவர் விசேஷ விருந்தினராகவும், செல்வி எம். ஹச்சின்ஸ் அம்மையார் பிரதம பேச்சாளராகவும் சமுகமாயிருந்து சிறப்பித்தனர்.


கீழ் மாகாணத்திலுள்ள பெரும்பான்மையான கிறிஸ்தவர்களும் ஆச்சிரம ஊழியர்களும் கிழக்கு மாகாணத்தில் போக்குவரத்து வசதியான இடத்தில் ஒரு ஆச்சிரமம் அமைப்பது கிறிஸ்தவ மக்களுக்கு ஆத்மீக ஜீவியத்திற்கு உதவியாக இருக்குமென பலமாக உணர்ந்ததால் மட்டக்களப்பில் பல இடங்களைப் பார்வையிட்டு கிரான் வாழ் கிறிஸ்தவ அன்பர் சிலருடைய வேண்டுகோளுக்கிணங்கவும் இறைவனுடைய திருவுளம் இதுவேயென நம்பியும் கிரான் பாதிரியார் தோட்டம் என்றழைக்கப்படும் பதினேழரை ஏக்கர் பூமி வாங்கப்பெற்று 1957-ம் ஆண்டு புரட்டாதி மாதம் ஜோதி நிலைய வருடாந்த விழாவுக்குப் பிரதம அதிதியாக அழைக்கப்பட்ட அன்புக்குரிய திருப்பத்தூர் பெரியண்ணன் டாக்டர் சவரிராயன் யேசுதாசன் அவர்களால் கிறிஸ்த மக்கள் சூழ்ந்திருக்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1957-ம் ஆண்டு புரட்டாதி மாதம் எங்கள் பெரியண்ணன் கனம். எஸ். செல்வரத்தினம் அவர்கள் கிரானில் உள்ள கிணற்றுக்கு அஸ்திபாரக்கல்லு வைத்தார். கிரானில் உள்ள சில கிறிஸ்தவக்குடும்பங்கள் சமுகம் அளித்தனர். அன்று நான்கு அடி உயரமான கிணற்றுக்கொட்டு கட்டப்பட்டது. அடுத்த நாட்காலை நாங்கள் வந்து பார்த்தபோது அத்தனையும் தகர்த்து எறியப்பட்டதைக் கண்டோம். மறுபடியும் புதிதாகக் கட்டி இரவுதோறும் காவல்காத்து இந்தக்கிணற்றைக் கட்டி முடித்தோம். இது கல்லாற்று மெதொடிஸ்த சபையாரின் அன்பளிப்பென்பது குறிப்பிடத்தக்கது. ஐப்பசி மாதக் கடைசியில் ''அடைக்கலகிரி'' என்னும் சிறு குடிசைக்குக் கிரான் கிறிஸ்தவரான திரு. சாமுவேல் குஞ்சுக்குட்டி உபாத்தியாயரும் அவர் மனைவியும் அத்திபாரக்கல் நாட்டினர். இக் குடிசை 1958-ம் ஆண்டு

பங்குனி மாதம் 8-ந் திகதி கனன் இராமனுதன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வின்சன் மகளிர் பாடசாலை தலைவி செல்வி A. பத்மன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1957-ம் ஆண்டு மார்கழி மாதம் 26-ம் 27-ம் திகதிகளில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின்போது வசிக்க இல்லிடம் அற்றவர்களாய் அவதியுற்ற சுமார் நாற்பது பேர் இக் குடிசையில் அடைக்கலம் புகுந்து ஆறுதல் பெற்றமையால் இக் குடிசைக்கு அடைக்கலகிரி என்ற பெயர் புனைந்தோம். அவ்வருடம் வைகாசி மாதம் இலங்கை முழுவதிலும் ஏற்பட்ட சமூகக்கலகம் கவலைக்கிடமான பல சம்பவங்களை ஆக்கியது. எங்கள் கிராம ஜனங்கள் நகர்காவலர்களாலும் இராணுவத்தினராலும் பலமாகத் தாக்கப்பட்டனர். ஒருநாள் காலை 3 மணியளவில் எங்கள் ஆச்சிரமத்தை நோக்கி சுமார் 60 முறை சுட்டார்கள். சகோதரர் குட்சைல்ட், கதிரேசு, சுந்தரராஜ், அந்தக்குடிசைக்குள் அருமை இரட்சகரின் அன்புக் கரங்களுக்குள் அடைக்கலப்படுத்தப் பட்டனர். கிராம ஜனங்கள் தங்கள் வீடுகளை விட்டு ஓடி ஒழித்துக் கொண்டனர். காலையில் அவர்கள் வந்து சுடுபட்ட இடங்களைப் பார்த்து இவர்கள் மூவரும் தப்பிப் பிழைத்தது தம்பிரான் செயல் என அதிசயப்பட்டனர். மெய்யாகவே இக்குடிசை எங்களுக்கு அடைக்கல கிரியாகவே அமைந்துள்ளது. நீதிபதி அரசு உவால்டன் அவர்கள் அவ்வருடம் ஆவணி மாதம் 30-ந் திகதி கிரான் ஆச்சிரம ஜெபாலயத்திற்கு அத்திபாரக்கல் நாட்டினர். அந்த நேரத்தில் அவர் கூறிய கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது. "சின்னண்ணன் இயேசுசகாயம் என்னிடம் வந்து இந்த ஜெபாலயத்திற்கு அத்திபாரக்கல் நாட்ட வேண்டுமென்று என்னைக் கேட்டபொழுது நான் அதற்கு தகுதியுள்ளவனோ என்று யோசித்து மறுத்துவிட்டேன். அன்றிரவு நான் சற்று நேரம் யோசித்து உங்கள் அழைப்புக்கு அமைந்து நீங்கள் கட்டவிருக்கும் ஜெபாலயத்திற்கு அத்திபாரக் கல் நாட்டுவேனென்று எழுதினேன். சென்ற வைகாசி மாதம் இக்கிராமத்தில் நடைபெற்ற ஒரு கொலை சம்பந்

முதல் செபாலயக் கொட்டில்



செபாலயத்தின் உள் தோற்றம்



தமாக உண்மையை அறிய இங்கே வந்து இரவு பதினொரு மணியளவில் மன அமைதியற்றவனாய் என்னோடு வந்த நண்பரொருவருடன் இவ்வழியாக நான் நடந்துகொண்டு போகையில் இக்கொட்டிலில் எரிந்துகொண்டிருந்த தீபத்தைக் கண்டு இதுதான் புதிதாக ஆரம்பித்திருக்கும் ஒரு கிறிஸ்தவ ஆச்சிரமம் என்றார். உடனே நான் உள்ளே வந்து சிறிது நேரம் அமைதியாக இருந்து ஜெபித்து மனச்சாந்தியும் உற்சாகமும் அடைந்தேன். எனவே மனக் கவலையும் துன்பமும் தொல்லையும் உடையவர்களாய் அல்லல்படும் மக்கள் கிறிஸ்து இயேசு அருளும் மெய் சமாதானத்தையும் பேரருளையும் பெற்றுக்கொள்ளும் புனிதஸ்தலமாக இருக்குமென்று உறுதியாக நம்பி இந்த ஆலயத்திற்கு அஸ்திபாரக்கல் நாட்ட முன்வந்தேன்'' என்று கூறினார். இந்த ஜெபாலயம் கடவுளுடைய பேரருளால் 1959-ம் ஆண்டு புரட்டாதி மாதம் பூர்த்தியாகக் கட்டப்பட்டு கொழும்பு அத்தியட்சர் மகாகனம் கிரஹாம்கம்பெல் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இங்கே வாழைச்சேனை, கல்குடா, காகிதத்தொழிற்சாலை முதலிய இடங்களிலிருக்கும் கிறிஸ்தவர்களும் சூழ இருக்கும் கிராமச் சபையாரும் ஞாயிறுதோறும் ஏனைய பண்டிகை நாட்களிலும் கூடி வணங்குவர். 1959-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27-ந் திகதி நடைபெற்ற ஒரு கல் நாட்டு வைபவத்தில் திருமதி A. Buell அம்மையார் எங்கள் சமையல் வீட்டிற்கும், திருமதி. பொன்னம்மா கார்த்திகேசு, ஆசிரியர் ஏ. ஆறுமுகம், ஆசிரியர் எஸ். ஏ. தம்பிராசா என்போர் சாது சுந்தர்சிங் மடத்திற்கு அத்திபாரக்கல் நாட்டினர். எங்கள் சமையல் அறை 61-ம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி திருமதி. இரத்தினசிங்கம் அம்மையாரால் தீபம் ஏற்றி திறந்துவைக்கப்பட்டது. அவ்வருடம் புரட்டாதி மாதம் நடைபெற்ற ஆண்டு விழாவின்போது சாது சுந்தரசிங் மடம் திருமதி. S. A. செல்வநாயகம் அம்மையாரால் திறந்து வைக்கப்பட்டது. 1963-ம் ஆண்டு எங்கள் ஜெபாலயம் சற்று பெரிதாக்கப்பட்டது. ஆச்சிரம நண்பர் திரு. மோசஸ்பிள்ளை அவர்களின் ஞாபகத்

தில் அன்னாரின் மனைவி பிள்ளைகளால் ஒரு அழகிய மணி கோபுரம் நிறுவப்பெற்று 1963-ம் ஆண்டு பங்குனி மாதம் 8-ந் திகதி வேதநாயக சாஸ்திரியாரின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் போது பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1964-ம் ஆண்டு ஆவணி மாதம் எங்கள் யாழ்ப்பாண ஆச்சிரம வெள்ளி விழா மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விழுகையும், எழுகையும் வெற்றியும் தோல்வியும் வாழ்க்கையில் நூதனமானவையல்ல. 65, 66-ம் ஆண்டுகள் எங்கள் ஆச்சிரம சரித்திரத்தில் ஒரு இருள் சூழ்ந்த காலம் என்று கூறலாம். சேவகனாக இருந்த வண. ஹரல்ட் குட்சைல்டும் சேவக அபேட்சகர்களாக இருந்த சகோதரர் கதிரேசு ஜெபரெத்தினம், Bassil Rebera என்பவர்கள் ஆச்சிரம ஐக்கியத்திலிருந்து விலகி சபைகளில் ஊழியம் செய்யத் தீர்மானித்துச் சென்றனர். அவர்களுடைய சொந்தக் காரணங்களை முன்னிட்டு அவர்கள் விலகின போதும் வளர்ந்துகொண்டு வரும் ஆச்சிரம பணிக்கு இது ஒரு விழுகை என்றே கூறவேண்டும். எனினும் கர்த்தர் ராஜரீகம் பண்ணுகின்றார். அவருடைய வழிகள் ஆராயப் படக் கூடாதவை. சபை ஊழியத்தில் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்த மாணவர் ஆச்சிரம அரசடி விடுதி, பல கிறிஸ்தவ பெற்றாரினதும் ஆசிரியர்களினதும் வேண்டுகோளுக்கிணங்கி கோட்டைமுனை மெதொடிஸ்த சபையின் பழைய குருமனையில் 1967-ம் ஆண்டு தை மாதம் திருவாளர் S. A. செல்வநாயகம் அவர்களால் இவ் விடுதி திறந்து வைக்கப் பட்டது. கனம். S. M. ஜேக்கப் போதகரும், திரு. E. A. உவில்லியம் அவர்களும் பொறுப்பேற்று நடத்தி வந்தனர். தற்போது திரு. E. சவுந்தரராஜா ஆசிரியர் பொறுப் பேற்று நடத்தி வருகிறார். கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் வாலிபர்களை இவ் விடுதியில் சேர்ப்பதில் கரிசனை எடுப்பது இதன் வளர்ச்சிக்கு உதவியாகும். இவ் வருடத்தில் திருமதி கந்தையா அம்மையார் ஆச்சிரமத்தில் இன்னுமோர்

## கட்டட ஆரம்பம்



அடைக்கலகிரி என்னும் குடிசைக்கு
திரு. சாமுவேல் குஞ்சுக்குட்டி
அடிக்கல் நாட்டுகிறார்.



திறப்புவிழாவன்று ஒரு காட்சி.

கிணற்றின் அவசியத்தை உணர்ந்து அத்தேவையை பூர்த்தியாக்கி தந்திருக்கிறார்கள்.

**10-ம் ஆண்டு நினைவுமண்டபம்** ஆச்சிரமத்தின் பெரிய தேவையாக இருந்த மண்டபமொன்றை கிழக்கு மாகாண கிறிஸ்தவர்கள் தங்கள் அன்பளிப்பாக அமைக்க வேண்டுமென்று தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாண்டு ஆனிமாதம் தென்னிந்திய திருச்சபை கன்னியாகுமரி அத்தியட்சர் மகாகனம் ஞானதாசன் அவர்கள் முதல் பொழிவெட்ட கத்தோலிக்க திருச்சபையைசேர்ந்த சுவாமி செல்வராஜா பிரார்த்தனை செய்து ஆரம்பித்து வைத்தனர். பின்பு சென்ற ஆடி 12-ம் திகதி இலங்கை மெதொடிஸ்த மகாசங்க சபாநாயகர் வண. பிறெட். டீ. சில்வா அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்று வேலை துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 10-ம் ஆண்டு நிறைவு விழாவை இம்மண்டபத்தில் கொண்டாட ஆண்டவர் கிருபை செய்வார்.

எங்கள் ஆச்சிரமம், மட்டக்களப்பு, கொழும்பு பிரதான வீதியில் அமைந்திருப்பதால் இவ்வழியாகப் போகிறவர்கள் தங்கி ஜெபித்து தம்பிரயாணத்தைச் செய்வதும், ஆத்ம பெலன் நாடி வந்து அமைதியாக இருந்து செபித்து தியானித்துப் போவதும் மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். அரசாங்க ஊழியத்தில் இருக்கும் கிறிஸ்தவர்கள் பலர் மாதத்தின் கடைசிப் போயா தினத்தன்று ஆச்சிரமத்தில் தங்கி உபவாசித்து செபித்துப்போகும் ஆத்மயோக நாளாக கடைப்பிடித்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ் வாண்டு சகோதரர்கள் போல், செல்வநாதன் போல். யேசுரெத்தினம் என்பவர்கள் ஆச்சிரம அங்கங்களாக சேரத் தீர்மானித்தமையால் அவர்களை ஆச்சிரம மித்திரர்களாக அங்கீகரித்துள்ளோம். இவர்களுக்காக செபித்து இவர்களை ஊக்குவிப்பது நமது கடமையாகும்.

ஒரு ஸ்தாபனத்தின் சரித்திரத்தில் பத்தாண்டுகள் மிகவும் சிறிது காலமேயெனினும், நரிக்கு குழியுண்டு குருவிக்கு கூடுண்டு எனக்கோ தலைசாய்க்க இடமில்லையென்று சொல்லுமளவுக்குத் துறவு ஒழுக்கத்தைச் சாதனை செய்த ஆண்டவர் இயேசுவை தரித்திரராகவே பின் செல்ல விரும்பிய அடியார்களின் ஆச்சிரம வாழ்வில் கனவிலும் நினையாத வழிகளில் நடத்தி, மனதாலும் நினைக்க முடியாத அருளையும் ஆசீர்வாதங்களையும் தந்து ஆதரிக்கும் அன்புக் கடவுளின் அருட் செயல்களை நினைத்தால் உள்ளம் உருகும். உடல் சிலிர்க்கும். உங்கள் செபத்தாலும், அன்பாலும், பொருளாலும், வரவாலும் இவ் வூழியத்தில் உடன் பங்காளிகளாய் இருந்த அனைவருக்கும் எம் அகம் கனிந்த நன்றி. ஆமென்.

அடைக்கலகிரி



அன்பர் லூரயிஸ் சுப்பிரமணியம் அவர்களின்
இன்ப நினைவு.

மணிக்கோபுரம்



திரு. மோசெஸ்பிள்ளை அவர்களின்
இன்ப நினைவு.

# ஆச்சிரமத்தில் ஒரு நாள்

செல்வன். ஜோன். எம்- பேரின்பநாயகம்.

ஆச்சிரமத்தில் வாழ்ந்து நலம் பெற்று வெளியேறிய அநேகர் இருக்க ஆச்சிரம ஒரு நாள் வாழ்க்கையைப் பற்றியெழுத ஆண்டவர் எனக்குக் கொடுத்த சலாக்கியத்தை நினைக்கும்போது எனக்கு களிப்பு மேலிடுகிறது.

கிரானிலும் சுன்னுகத்திலும் ஆச்சிரமமுண்டு. அதில் பெரியண்ணன், சின்னண்ணன் சாம் அண்ணன் என்ற மூவர் உள்ளனர் என்று ஒரு சில வருடங்களுக்கு முன்னர் அறிந்தேன். அறிந்தனே தவிர அவர்களில் ஒருவரைவிட எனக்கு வேறு ஒருவரையும் தெரியாது. நான் முதல் அறிந்த அவர் தான் சின்னண்ணன். சிறுபிள்ளையாய் இருக்கும்போது அவருடைய செவிக்கினிமை தரக்கூடிய பாடல்களைக் கேட்டேன். ஆனல் காலப்போக்கில் அவரையும் மறந்தேன்.

ஆச்சிரமமென்ருல் அது சிறு ஆலயமாகத்தான் இருக்கவேண்டு மெனக் கற்பனை பண்ணிக்கொண்டேன். புதிய புதிய பாடல்களைப் பண்ணிசைத்துப் பாடக்கூடிய பாவன்மை ஆச்சிரமத்திலுள்ளவர்களுக்குத்தான் உண்டு என்பதை அறிந்தேன். அதை ஆச்சிரமத்திலிருந்து அனுபவப்பட்ட சிறுர்களின் மூலமாக கண்ணுரக்கண்ட நான் ஆச்சிரமத்திலிருந்து அனுபவப்பட்ட என் உறவினர்களுடன் ஆச்சிரமத்தைப்பற்றி அறிவதையே பெரிதும் விரும்பினேன். ''பெரியண்ணன்'' இருக்கிருர். அவருடைய துறவறத்தைக் கண்டாயாகில் நீ வாயில் கை வைத்து ஆச்சரியப்படுவாய் என்றும் அவர்கள் கூறினர். அவரை நான் சந்திக்கவேண்டும் என் உள்ளத்திலே ஏற்பட்ட அவிசுவாதத்தை நீக்க அவரிடம் ஆலோசனை கேட்கவேண்டுமென்று எண்ணினேன்.

நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பொன்னுள் வந்தது. ஆம்! எங்களுடைய மண்டூர் மெதொடிஸ்த

சபையின் ஆண்டுவிழா நடைபெற்றது. அதற்கு தலைமை தாங்க பெரியண்ணன் வந்தார். அவருடைய தோற்றம் என் உள்ளத்தை நெகிழச் செய்தது. அவருடைய வாயிலிருந்து வெளிவந்த ஒவ்வொரு வார்த்தையும் என் உள்ளத்தை உறுத்தியது. என் உள்ளத்திலே இருந்த அவிசுவாசம் அகன்றது. இவரது நகைச்சுவையும், மனமகிழ்ச்சியும் வேடிக்கை கதைகள் சொல்லும் பாங்கும், தனது பிரசங்கங்களில் வேடிக்கைச் சம்பவங்களை எடுத்துக் காட்டாகச் சொல்லும் நயமும் என்மனதை பெரிதும் கவர்ந்தது. இவர் கூறிய பல அனுபவங்கள் இறைவனின் நேரான திருச்செயல்கள்தான் என்ற பேருண்மையை நான் அறிந்தேன். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் இயல்பிலேயே திறமையற்றவன் என்ற அபிப்பிராயம் தவறானது என்பதற்கு ''பெரியண்ணன்'' சாட்சியாக விளங்குகின்றார்.

அவருடைய பிரசங்கமும் வியாக்கியானங்களும் என் உள்ளத்திலே ஆச்சிரமத்தில் ஒரு நாளாவது தங்கவேண்டும் என்ற ஒரு ஆசையை ஏற்படுத்தியது. அந்த நாளும் கூடிய விரைவில் வந்தது. ஆச்சிரமத்திற்கு செல்ல என் உறவினர் ஒருவர் அழைத்தார். அம்மாவிடம் அனுமதி கோரினேன். அகமும் முகமும் மலர அனுமதி தந்தா. அன்றே புறப்பட்டேன். ஆச்சிரமம் வந்தடைந்தேன். பெரியண்ணனிடம் சென்று என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன். என்னுடன் நுவரெலியாவில் இருந்து வந்த சுவிசேஷ ஊழியர்கள் சிலரும் வந்திருந்தனர். அன்று அங்கேயே மதிய போசனமருந்தினோம். ''பெரியண்ணன்'' எல்லோரிடமும் சாப்பிட்ட பாத்திரங்களை வாங்கி கொண்டுபோய் கழுவி வையும் என்று என்னிடம் கூறினார். ஆங்கில உடையினுள் புகுந்திருந்தேனாகையால் அவர் சொன்னது என்மனதை பெரிதும் சங்கடப்படுத்திவிட்டது. ஆனாலும் அவர் என்னிடம் இட்ட அந்த அன்புக்கட்டளையை ஒரு மறுப்பும் சொல்லாமல், சொல்லியபடி செய்தேன். வந்தவர்களை வழி

யனுப்பிவிட்டு அன்று நான் அங்கு தங்கினேன். புதுப் புது முகங்களுடனும் பெரியமனிதர்களோடும் பழகக் கூடிய ஒரு பேறு ஆச்சிரமத்தில் வாழும் ஒருவனுக்குக் கிடைக்கும் என்பதை கண்கூடாகக்கண்டு கொண்டேன்.

ஆச்சிரமம் என்றால் அது ஒரு சிறு செபாலயமாகத் தான் இருக்கும் என்ற என் எண்ணம் தகர்ந்தது. பல ஏக்கர்கள் விசாலிப்பான இடத்தில் சிறு சிறு கட்டிடங்களாக அமைந்து அது ஒரு பெரிய நிறுவனமாக காட்சியளித்தது.

மாலை 6-30 மணிக்கு வழக்கமாக நடைபெறும் ஆராதனை செபாலயத்தில் நடைபெற்றது. அதை ஆச்சிரம தொண்டர்களில் ஒருவர் நடத்தினார். இதைக்கண்டதும் நான் பன்மடங்கு ஆச்சரியப்பட்டேன். நான்கு பேருக்கு மத்தியிலே செபம் செய்ய தெரியாத வாலிபர்கள் இருக்கும் சமயத்தில் இப்படிப்பட்ட சம்பவம் என்னைப்போன்றவர்களுக்கு ஆச்சரிய சம்பவமாகத்தானே இருக்கும். செப ஆராதனை முடிந்த பின்னர் மாலை ஆகாரத்திற்குரிய மணி அடிக்கப்பட்டது. தொண்டர்களால் சமைக்கப்பட்ட உணவு அனுபவப்பட்ட அம்மாமாரின் உணவை விட மேலாக இருந்தது. இதன் பின்னர் பாடசாலை செல்லும் சிறுர்கள் இரவு 9 மணிவரை அமைதியாக இருந்து படிக்கவேண்டும். அந்த நேரத்தில் அவர்களுடன் நானும் சென்று அமர்ந்து கொண்டேன். 9 மணிக்கு ஒரு மணி அடித்தது. நித்திரை கண்ணை சுழட்டியது இனிமேல் படுக்கைதான் என எண்ணி என்னருகே எனக்காகக் கொடுக்கப்பட்ட அந்த பாயில் படுக்க எத்தனித்தபோது கணீர்! கணீர்! என ஒருமணி ஒலித்தது, உடனே எழுந்து அவ்வொலியின் காரணமென்னவென்று வினவினேன். அது குடும்பஜெபத்துக்குரிய மணி ஒலி என்பதை அம்மாணவர்கள் மூலம் அறிந்து பெரியண்ணன் இருக்கும் அந்த குடிசையை அவர்களுடன் அடைந்தேன். அங்கு அடுத்த நாட்களுக்குரிய வேலைகளைப் பற்றி எல்லோரும்

கலந்துரையாடினர். கதைகளின் மத்தியில் பெரியண்ண னின் அனுபவகதைகளேயும் அவரின் நகைச்சுவை ததும் பும் பேச்சையும் கேட்கக்கூடியதாக இருந்தது. குடும்ப ஜெபம் முடிந்தபின்னர் படுக்கையை நாடினேன்.

அதிகாலே 5 மணிக்கு ஆலயமணி ஒலிகேட்க அதன் பின்னல் பெரியண்ணன் இசைத்த ''சருவலோகாதிபா', என்னும் பாடல் படுக்கையில் இருந்த என்னே தட்டி யெழுப்பியது. காலேக்கடனே முடித்து ஆலயத்திற்குச் சென்றேன். அப்பொழுதும் ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனேயை ஆச்சிரமத் தொண்டர்களே நடத்தினர். பெரியவர்கள் இருக்கும்போது சிறியவர்கள் ஏன் செபக் கூட்டத்தை நடத்தவேண்டுமென்று தொண்டர்களிடம் வினவினேன். வருங்காலச் சந்ததிகள் வழிபடத்தெரிந்து வைத்திருப்பது நல்லதுதானே என ஒரு தொண்டர் கூறி ஞர். விசேஷ நாட்களேத்தவிர மற்றநாட்களிலெல்லாம் ஆச்சிரம தொண்டர்களே ஆராதனேயை நடத்துகிருர்கள் என்று மேலும் அவர் கூறினர். ஆராதனே முடிய சிறிது நேர அமைதிக்குப்பின்னர் காலே தேனீர்கிடைத்தது அதன் பின்னர் அநேக அலுவல்களே நான் மேற்கொள்ள இருந்ததால் அன்பும் பண்பும் கொண்ட ஆச்சிரமதொண் டர்களுக்கும் பெரியண்ணனுக்கும் நன்றி கூறி விடை பெற்றேன்.

குறைவுள்ளவர்களாய் வருபவர்களே நிறைவுள்ளவர்க ளாக்கி அனுப்பும் அரியபணியை ஆச்சிரமம் மேற்கொண் டுள்ளது. இதை ஆச்சிரமத்திலிருந்து வெளியேறிய பலரின் வாழ்க்கையை நோக்கினல் இது நன்கு புலப்படும். ஆச் சிரமம் கிறிஸ்த உலகத்துக்கு செய்து வரும்சேவை அளப் பரியது. கிறிஸ்தவ வாலிபர்களுக்கு மதத்தில் வாஞ் சையை ஏற்படுத்துகிறது என்று சொன்னல் அது மிகை யாகாது. இத்தகைய ஆச்சிரமம் பத்தாண்டுகளல்ல பல ஆண்டுகள் நிலேபெற்று சிறந்தோங்க ஆண்டவரருள் புரி வாராக.

# இறை வழிபாடும் இசையின் மகிமையும்

## ( கலைச்செல்வன் R. B. ஜெயசீலன் )

மனிதன் நாகரிகம் அடைந்த காலமுதல் இறை வழிபாடு தொடங்கியதென்பது டார்வின் கருத்தைப் பின்னணியாகக் கொள்பவர்களது கருத்து. ஆனால் மனிதன் உண்டாக்கப்பட்ட நாள் முதல் இறை வழிபாடு தொடங்கியதென்பது அருள்மறையாம் திருமறையாகிய விவிலிய நூலின் விளக்கம். மனிதன் இயற்கையின் அருளைக் கொண்டு இறை வழிபாட்டில் இசையைப் பயன் படுத்தினன். வரைவிலக்கணம் இல்லாமலே பாடினன். ஆனலும் தேவாரம் திருப்புகளெல்லாம் இறைவனைப் புதிய முறையில் வரைவிலக்கணத்துடன் பாடத் தொடங்கியுள்ளதை விளக்குகிறது. காலப்போக்கில் அன்னியரின் ஆதிக்கத்தினல் மேல்நாட்டு நாகரீகம் மாத்திரமல்ல மேல் நாட்டு இசையும் எமது நாட்டை அதிகமாகப் பாதித்தது. பாதிக்கப்பட்டவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனல் வேதநாயக சாஸ்திரியார், கிறிஸ்தவ கம்பன் கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கிறிஸ்தவ இசை உலகுக்கு ஒரு புது வழி காட்டினர். அந்த வழி இசைவளர ஆச்சிரமம் போன்ற ஸ்தாபனங்கள் கிறிஸ்த உலகுக்கு வழிகாட்டியது என்ருல் மிகையாகாது.

கிறிஸ்தவர்களாகிய நமது இறை வழிபாட்டிற்கு வேத நூல், செப நூல், இசை நூல் என்ற மூன்றும் உயிர்த்துணையாய் அமைந்துள்ளன. வேத நூலும், செப நூலும் ஆத்மயோகத்திற்கு தாய்மரம்போல் அமைந்திருக்க இசை நூலோ கிளைகளாகப் பரந்து நூற்ருண்டுகளாகப் பலநாடுகளில் பல மொழிகளில் பல சந்தர்ப்பங்களில், பல பக்தர்களாலும் பாடப்பெற்று வளர்ந்து கொண்டிருப்பதை நாம் காணலாம். தமிழ் கிறிஸ்தவர்களாகிய நாம் ஆத்ம தூய்மையும் சக்தியும் உடையவர்களாய் இயேசுவின் அருள் வடிவம் பெற்று மகிழ கீர்த்

தனைகள் கூட்டுப்பிரார்த்தனைகள் தேவாரங்கள் திருப்புகழ் கள் மிகவும் முக்கிய அம்சமாக அமைந்துள்ளன.

கிறிஸ்தவ ஊழியத்திலே கலைஞானம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று இருக்கிறது. அனேகமாக கிறிஸ்துவின் போதனைகளுக்கும் அவருடைய மகிமையான ஊழியத் திற்கும் கலைஞானம் மிகவும் உதவியளிக்கின்றது. ஆனால் அக்காலத்திலும் இக்காலத்திலும் கீழ்நாட்டு இசை முறை யிலேயும் மேல் நாட்டு இசை முறையிலேயும் இறைவழி பாடு செய்கிறார்கள். இந்த இறை வழிபாட்டின் மகிமை யையும் நல்லதொரு சிறப்பான அமைப்பையும் எடுத்துக் காட்டுவதற்கு இசை மிகவும் உதவி புரிகிறது. அன்றியும் ஆலய வழிபாட்டுக்கென்று ஆதிகாலம் தொட்டு அனேக பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்ட பரிசுத்த வேதாக மத்திலே சங்கீதங்களும் ஒரு பகுதியாகும். ஒவ் வொரு சங்கீதமும் ஒவ்வொரு இராகத்திலேயோ அல்லது வசன நடையிலேயோ பாடப்பட்டிருக்கலாம் ஆனால் எங்களுடைய கிறிஸ்தவ ஊழியர்களில் சிலர் சில சங்கீதங்களுக்கு அருமையான இராகம் கண்டுபிடித்து ஆலயங்களில் பாடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் முழுச் சங்கீதங்களும் கீழ்நாட்டு முறையில் இசை அமைத்துப்பாடினால் நல்லபடியாக அமையுமென்பது என் எண்ணமேயாகும்.

கடவுளின் வார்த்தையும், கடவுளின் தொனியாகிய கீதமும் ஒருங்கு சேரும்போது அங்கே சந்தோஷத்தின் நிறைவில் பொலிவுறுகிறது. இந்த சந்தோஷத்தின் நிறைவு சங்கீதத்தின் தொனியிலே நிறைவடைகிறது. மேலும் அந்தந்த நாட்டு இசைவழியையே மக்கள் விரும்பு கின்றனர். எனினும் கீழ்நாட்டு இசை இன்று உலக அரங் கில் எல்லோராலும் விரும்பப்படுகிறது. இந்த வேளையில் நாம் மேல்நாட்டு இசைமோகத்தில் இருப்பது ''கனியிருப் பக் காய் கவர்வது போலாகும்'' இன்று மக்கள் இசை யின் உதவியுடன் இறைவனைத் துதிக்க விருப்பமுடைய

வர்களாக இருப்பதை நாம் காணக்கூடியதாய் இருக்கின்றது.

ஆகவே இறை வழிபாட்டில் இசைக்கலை மனித வாழ்வின் நிறைவடைதலாய் இல்லாவிடினும், இவ்விசை இறைவன் வழியில் எம்மை எதிர்கொண்டழைக்கின்றது என்பது ஒருதலை, காலத்தாலழியாத காவியங்கள் பல தமிழ் ஓவியங்களாக தோன்றச்செய்தது இறை வழிபாட்டில் மனிதன் இசையைப் பயன்படுத்தியதே. ஆகவே இருபதாம் நூற்றுண்டின் மத்தியில் வாழும் மனிதன் இருப்பதைக்கொண்டு நிறைவுறுமல் என்னென்னவோ செய்கிறுன். அப்படிப்பட்ட மனிதன் இந்த இசையுலகிலும் எமது முன்னேர் போற்றிவந்த மரபு வழிகளையும் மாற்றிவிடாமல் புது உயிரூட்டி உலக அரங்கில் புது ஏடு அமைக்க இவ்விசை இன்பத்தை தான் நுகர்ந்து தன்னினம் நுகர்ந்து, தன் சுற்றம் நுகர்ந்து தமிழ் வாழும் உலகமெலாம் தணியாத புகழ்பெற இவ்விசையின்பம் இறைவழிபாட்டில் வளர வேண்டுமென்பதே என் அவா.

ஆலய வழிபாட்டிலே இசைக்கலையைப் புகுத்தி வழிபாட்டை சிறப்பிப்பதிலே சிறிஸ்த சேவ ஆச்சிரமம் இன்றும் என்றும் ஒரு முக்கிய இடத்தை வகுத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆலய வழிபாட்டிலே இசைக் கருவிகளை வாசித்து வழிபாட்டை சிறப்பிப்பதிலே ஆச்சிரம அடியார்கள் மிகவும் வாஞ்சையுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நம்முடைய இறைவனே.

“ தம்புரு வாசித்து, வீணையையும்
இனிய ஓசையான சுரமண்டலத்தையும்
எடுத்துப் பாடி ஆர்ப்பரிக்க வாருங்கள் ”

ஆமென்.

# அன்பைப் பிரதிபலிக்கும் ஆச்சிரமம்

(ரீ. பாக்கியநாயகம்)

(கிழக்கிலங்கை இளம் எழுத்தாளர் மன்ற உறுப்பினர்)

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கிரான் கிறிஸ்தவ ஆச்சிரமத்திற்கு நீதிபதி திரு. அரசுவாஸ்டன் அவர்கள் அடிக்கல் நாட்டிய சம்பவம் எனது இதயத்திலே இன்னும் பசுமையாய் நிலைத்து நிற்கின்றது. அன்று அந்த உத்தம அடியானும். ஆண்டவருடைய ஊழியத்திற்காகத் தம்மை முற்றிலும் தத்தம் செய்த ஆச்சிரமத்து அன்பர்களும் ஆரம்பித்து வைத்த இந்த உன்னத முயற்சி இன்று ஆல் போல் பரந்து வளர்ந்துள்ளதைப் பார்க்கும் நாமனைவரும் முதற்கண் ஆண்டவருக்கு நமது மனப்பூர்வமான நன்றியறிதல்களைச் செலுத்தல்வேண்டும். கிரான் ஆச்சிரமத்தின் மூலமாக கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவரல்லாதோருக்கும் கிறிஸ்துபிரானின் கிருபையையும் அன்பையும் அவரின் அடியார்கள் பரப்பிவருதல்பற்றி நாம் ஆண்டவரை துதித்தல் அவசியமாகும்.

ஓர் ஸ்தாபனத்தின் பத்தாண்டு வளர்ச்சியை அவ்வளவு பிரமாதமான வளர்ச்சி என்று குறிப்பிட முடியாது. பள்ளிக்கூடம் செல்லும் பத்து வயதுப்பாலகனிடம் நாம் அதிகம் எதிர்பார்ப்பதுமில்லை—எதிர்பார்த்தலும்கூடாது. ஆனால் கிரான் ஆச்சிரமத்தைப் பொறுத்தமட்டில் அதனது பத்தாண்டு வளர்ச்சி பிரமிக்கத்தக்கதென்றே கூற வேண்டும். ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் பல்வேறு இன்னல்கள் பிரச்சனைகள் நெருக்கடிகள் மத்தியிலே இங்கு நிறுவப்பட்டுள்ள ஆச்சிரமத்தின் வளர்ச்சியில் ஆண்டவர் அதிக அக்கறை கொண்டிருந்தமையால் அவரது வல்லமையும் வழிநடத்தலும் இங்குள்ள பெரியண்ணனோடும் சின்னண்ணனோடும் ஏனைய அடியார்களோடும் தங்கியிருந்தமையால், இதனது பத்தாண்டு வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது! ஆபிரகாமின் தேவனால்

ஆகாத காரியமும் உண்டோ? நேற்றும் இன்றும் என்றும் மாறாத தெய்வம் அவருடைய ஊழியத்திற்காக, அவரது நாமம் விளங்கும்படி தெரிந்தெடுத்த புண்ணியபூமியை ஆசிர்வதியாமலிருப்பாரோ?

ஆச்சிரம ஆரம்பகாலத்திலே சின்னண்ணன் அவர்களும் அவர்தம் உடன் ஊழியர்களும் இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியிலேதான் இங்கு ஊழியம் செய்தனரென்பதை பலரும் அறிவார்கள். கிறிஸ்துவை அறியாத பிறசமயத்தவர்கள் மத்தியிலே அவர்கள் வாழ்ந்து, அம்மக்களது துயர்துக்கங்களில் பங்கு கொண்டு, அவற்றினூடாக அவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பைப்போதிக்க வேண்டிய அவசியம் நேரிட்டது. கிறிஸ்தவர்களென்றால் பெருமையுள்ளவர்கள் வைராக்கியமுடையவர்கள் என்றெல்லாம் அதுவரை எண்ணியிருந்த இந்துக்கள், கிறிஸ்தவர்களும் குடிசை வாழ்வை அறிவார்கள். ஏழைகளின் துன்பங்களிலும் பங்கு கொள்வார்கள் என்று அறிந்து கொள்ளவைத்த பெருமைஆச்சிரம அடியார்களையேசாரும். பரிசுத்த பவுல் பிலிப்பியருக்குச் சொன்னதுபோல், ''எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டு, தாழ்ந்திருக்கவும் வாழ்ந்திருக்கவும் தமக்குத் தெரியுமென்பதை'' ஆச்சிரமத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள மக்களுக்கு விரைவில் நிரூபித்தார் சின்னண்ணன்.

காலக்கிரமத்திலே ஆச்சிரமத்தினை சந்தேகக்கண்ணுடன் நோக்கிய பிறசமயத்தினர், ஆச்சிரமத்தினரின் அன்பினால் கட்டுண்டு அங்குநடைபெறும் ஆராதனைகளுக்கு வந்து ஆண்டவரை வழிபடவும், அவரது சிலுவைத்தியாகத்திலுள்ள அன்பின் தாற்பரியத்தை அறிந்துகொள்ளவும் ஆயத்தமானார்கள். இந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு வருவதற்காக, அல்லும் பகலும் ஆண்டவரின் வல்லமையினால் வழிநடத்தப்பட்டு, துன்பங்களையும், தீயவர்களின் தகாதவார்த்தைகளையும் பொறுமையுடன் சகித்த வண்ணம் ஊழியம் செய்தார் சின்னண்ணன்.

அவ்வட்டார மக்களது குடும்பப் பிரச்சனைகளையும் சரீர வியாதிகளையும் ஆண்டவரது அனுக்கிரகத்தால் அவர் தீர்த்து வைத்து, அவர்களது ஆத்மீக நோய்களைக்குணப் படுத்தும் வண்ணம் பரம வைத்தியனாகிய ஆண்டவர் இயேசுவிடம் அவர்களை அறிமுகம் செய்துவைத்தார். ''அன்புள்ளார் என்பும் உரியர் பிறர்க்கு'' என்ற வள்ளுவர் வாக்கின்படி, அப்பகுதி மக்களின்பால் தமது அன்பைப் பொழிந்து அவர்களது நன்மதிப்பைப்பெற்று அதன்மூலம் ஆண்டவரது அன்பை அவர்களுக்கு அவர் பிரதிபலித்தார். ''பாருருவாகுமுன்னே இருந்த பரப் பொருள்தான் இவரே மேசியா இவர்தானே நம்மை மேய்த்திடும் நரர்கோனே'' என்றெல்லாம் கிறிஸ்துபெருமானைச்சுட்டிக்காட்டினர் ஆச்சிரம அடியார்கள். இவர்களது ஊழியத்திற்கு கிராமிலுள்ள ஒருசில கிறிஸ்தவ குடும்பத்தினரும், மட்டக்களப்பு பகுதியிலுள்ள பிறசேகர கிறிஸ்தவர்களும் பக்கபலமாகவிருந்தனர்; பயன்தரு ஆலோசனைகளை ஈந்தனர்.

சுற்றுவட்டாரமக்களின் ஆத்மீக வளர்ச்சியில் அக்கறைகொண்டிருந்த அடியார்கள் காலக்கிரமத்தில் ஆச்சிரம கட்டிட வளர்ச்சியிலும் சிரத்தை கொள்ள ஆரம்பித்தனர். விரைவில் ஆச்சிரமவளவுக்குள் பல கட்டிடங்கள் எழும்பவாரம்பித்தன. ஓய்வு நாட்களிலும் விடுமுறை காலங்களிலும் அமைதிதேடி ஆச்சிரமத்தை நாடி வருவோர்க்கு தங்குமிடமாக இவை உபயோகப்படுகின்றன.

ஆச்சிரமத்தில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வரும் ஆண்டுவிழாவும் அருள் விழாவும் உண்மையில் ஆண்டவரது மகிமைக்கு சாட்சியளிப்பவையாக விளங்குகின்றன. அருள்விழாவில் முத்தமிழான இயல், இசை, நாடகத்தின் மூலமாக சாதாரணமக்களும் கிறிஸ்துவை விளங்கிக்கொள்ளும் வண்ணம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

இன்று கிரான் கிறிஸ்தவ ஆச்சிரமம் ஓர் அன்றுடச் சொல்லாக மாறிவிட்டது. பஸ்சாரதியிலிருந்து பலசரக்கு வியாபாரி வரை கிரான் ஆச்சிரமத்தைத் தெரியாதார் யாருமே இல்லையென்றேகூறலாம். ஆச்சிரமம் ஆரம்பித்து பத்தாண்டுகள் நிறைந்து விட்டதென்பதை என்னல் நம்பவே முடியவில்லை. இவ்வளர்ச்சி குறித்து கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் பெருமைப்பட வேண்டும்.

பத்தாண்டிலே பிரமாதமான வளர்ச்சியைப்பெற்றுள்ள கிரான் ஆச்சிரமத்தை நாமனைவரும் வாழ்த்துகிறேம். ஆண்டவரே தெரிந்து நடத்தும் இவ்வூழியத்தில் பங்கெடுக்கும் அவரது அடியார்களான பெரியண்ணன் மேலும் சின்னண்ணன்மேலும் சாம் அண்ணன் மேலும் மற்றும் ஊழியர்கள் மேலும் தேவ ஆவி தங்கி அவர்களுக்குப் பெலனையும் வல்லமையையும் என்றென்றும் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம். அமைதியையும் ஆத்மீக வளர்ச்சியையும் நமக்கெல்லாம் தந்துகொண்டு, ஆண்டவரின் அன்பைச்சுடர் விட்டு பிரகாசித்துக்கொண்டிருக்கும் இந்த ஆச்சிரமம் என்றென்றும் இங்கு நிலைத்து, இதன்மூலமாக ஆண்டவரின் ஊழியம் மென்மேலும் மகிமைப்படவேண்டுமெனவும் பிரார்த்திப்போம். இந்த ஊழியத்தில் நாமனைவரும் பங்கு கொண்டு கிறிஸ்துவின் நாமத்தை இன்னும் பரப்பி சாட்சிபகர அவரே நம் ஒவ்வொருவரையும் வழிநடத்தட்டும். கடைசியாக சின்னண்ணன் இயற்றிய பாட்டிலே சொல்லியிருப்பதுபோல அன்பன் இயேசுவின் நாமத்திலே இன்று இன்பமாய் நாம் மகிழ்வோம். வேகமாய் இயேசுவண்டை ஓடிடுவோம், தாகமாய் ஈசன் அன்பை நாடிடுவோம். ஜெகத்தினில் மாந்தர் ஜெயம் பலம் பெற்றேம். அகமகிழ்ந்தார்ப்பரித்தானந்திப்போம்.

# அரும்பணியாற்றும் ஆச்சிரமத்தாய்

**கிரான் ஜீவன்**

ஐயிரண்டு ஆண்டு அரும்பணியை — தன்
மெய்யிரண்டு கரங்கொண்டு செய்தவளாம்
உய்ய உலகுக் கொளிகாட்டி — நிதம்
உழைப்பவள் ஆச்சிரமத்தாயம்மா.

ஐம்பத்தி யெட்டாம் ஆண்டிலவள் — கிழக்கில்
அரும்பணி செய்ய நாட்டங்கொண்டு
மட்டு நகர் வடக்கில் வந்தமர்ந்தாள் — தன்
வாழ்நாளை நிதம் தந்தமர்ந்தாள்

கிரானெனும் பேர் கொண்ட சிற்றூராம் — இங்கு
கிளையாக மகிழ்வூட்ட வந்தவளாம்
வளமான வாழ்வு நாம் பெற்றிடவே ஆவி
வரமீய நிதம் உழைப்பவளாம்.

தந்தைக்கு தந்தையாய் இருப்பவளாம் — பெற்ற
தாயரைப்போல் நம்மைப் பேணுவளாம்
எத்தகையவர்க்கும் வாழ்வளிப்பவளாம் — யேசு
நாமம் பாரிலோங்க உழைப்பவளாம்

எத்தனையோ பேர்க்குத் தாயம்மா — இங்கு
என்போன்றோர் அவள் சேயம்மா
பந்த பாசமிங்கில்லையம்மா — இதை
பாரினர் உணர்ந்திட வேண்டுமம்மா

ஆச்சிரமம் என்னும் அன்னையம்மா — அன்பால்
அடியேனை ஐந்தாண்டு ஆதரித்தாள்
எத்தனை வழிமுறை வகுத்தாலும் வாழ்வில்
ஏனோ அவளைப் பிரிந்தது வேதனைதான்.

ஜோன்மேகல் பிரெஸ், அன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்.